பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 01 புதன்கிழமை 17.11.2021 கதிர் 12

### இது ரகசியம் அல்ல!

'சரித்திரம் திரும்புகின்றது' – இன்றைய ஆசிரிய தலையங்கத்தின் தலைப்பு இது. கொழும்பில் அரசியல் செல்நெறி மீண்டும் ஒரு தடவை பழைய வடிவத்தில் எழுத ஆரம்பிக்கப்பட்டிருப்பது பற்றிய விவகாரம் அது.

அந்த விடயத் பக்கம்02

# பொலிஸாரின் தடைகளைத் தகர்த்தெறிந்து தலைநகர் கொழும்பில் திரண்டனர் மக்கள்!

## அரசுக்கு எதிராக விண்ணதிரக் கோஷம்



விவசாயம் அழிப்பு, பொருள்களின் விலையேற்றம், பொருளாதார நெருக்கடி ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் ஐக்கிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாபெரும் அரச எதிர்ப்புப் போராட்டம் தலைநகர் கொழும்பில் நேற்று மாலை முன்னெடுக்கப்பட்டது.

பொலிஸாரின் பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும் பெருந்திரளான மக்கள் கொழும்பு நோக்கி வந்து நிவாரணம் வேண்டும், வாழ்க்கைச்சுமை குறைக்கப்பட வேண்டும், நாட்டு வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும், உரப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என விண்ணதிரக் கோஷங்களை எழுப்பினர்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துக்கு முன்னால் பேரணி ஆரம்பமாகி, 2

# அரசு வீட்டுக்குச் செல்லும்வரை தொடரும் மக்களின் போராட்டம்



## ஊழல் அற்ற ஆட்சியை உருவாக்குவேன்; எதிர்ப்பு பேரணியில் சூளுரைத்தார் சஜித்

கொடுங்கோல் ஆட்சி நடத்தும் ராஜபக்ஷ குடும்ப அரசு வீட்டுக்குச் செல்லும் வரை அரசுக்கு எதிரான மக்களின் போராட்டம் தொடரும். ஊழல், மோசடி அற்ற ஆட்சியை உருவாக்கி தாய்நாட்டையும், மக்களையும் காப்பேன்.

– இவ்வாறு சூளுரைத்தார் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ.

கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்தியால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அரச எதிர்ப்பு பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். 2

## 'சஜித் கொத்தணி' உருவாகும் ஆபத்து

### இப்படிக் கூறுகின்றது அரசு

கொரோனாவுடன் விளையாடக்கூடாது. போராட்டம் நடத்தி அரசியல் செய்வதற்கான நேரம் இதுவல்ல. எதிரணியின் போராட்டத்தால் 'சஜித் கொத்தணி' உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

– இவ்வாறு காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் 2

## மக்களைத் தடுத்துத் துன்புறுத்திய அதிகாரிகள் மீது சட்ட நடவடிக்கை

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு



கொழும்பு, நவ. 17

வாகனங்களில் பயணிக்கும் நபர்களின் பெயர்ப் பட்டியலைத் தொகுப்பது, புகைப்படங்களை எடுப்பது என்று தனிமனிதரின் சுயாதீனத்துக்குக்கூட சவால் விடுக்கும் அளவுக்கு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதோடு, அந்த உத்தரவுகளின்படி செயற்படும் அதிகாரிகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி சட்ட நடவடிக்கை 2

## மக்களின் போராட்டத்தை தடுத்து நிறுத்த முடியாது

### கொழும்பு நீதிமன்றம் உத்தரவு

ஐக்கிய மக்கள் சக்தியால் நேற்று பொரளை பிரதேசத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்தை தடுத்து நிறுத்துவதற்கு உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு பொரளை பொலிஸாரால் விடுக்கப்பட்ட கோரிக்கை 2

## தரம் 6, 7, 8, 9 வகுப்புகள் திங்கள் முதல் ஆரம்பம்

தரம் 6, 7, 8, 9 வகுப்புகள் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மீள ஆரம்பமாகவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டிருந்த நிலையில் கட்டம் கட்டமாக பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தரம் 6, 7, 8, 9 2

## கொரோனா தீவிரமடையும்!

### சுகாதார அமைச்சு அபாய எச்சரிக்கை



மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை முறையாக பின்பற்றாவிட்டால் இன்னும் 10 நாள்களில் கொரோனாத் தொற்றாளர்கள் தீவிரமடையும் அபாயம் உள்ளது எனச் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொரோனா நோய் பரவல் தொடர்பில் 2

## எரிபொருள் தாராளம்; முண்டியடிப்பு வேண்டாம்!

(கலையமுதன்,ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.17

அதிகளவு கொள்வனவு காரணமாக சில பெற்றோல் நிலையங்களில் செயற்கைத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வதந்தியால் ஏற்பட்ட நிலைமை என்றே இதனை நாங்கள் கருதுகின்றோம். தேவையான எரிபொருள் யாழ்ப்பாணத்திலும் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

துக்குள் இறங்க முன்னர் வடக்கில் குறுகிய காலத்துக்குள் 'சரித்திரம் திரும்பும்' ஒரு சம்பவம் குறித்து விவரிக்க வேண்டியுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் பதவியை சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த கணக்காளர் செல்வேந்திராவிடம் சில மாதங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பறிகொடுத்தமை குறித்து இப்பத்தியில் நேரத்துடனேயே விலாவாரியாக எழுதியிருந்தேன். வாசகர்களுக்கு அது நினைவிருக்கலாம்.

2018 உள்ளூராட்சித் தேர்தல் சமயம் அப்போது ரெலோவில் இருந்த ஸ்ரீகாந்தா – சிவாஜிலிங்கம் குழுவின் விருப்பு மற்றும் வற்புறுத்தலுக்கு அமைய அந்த நகர சபைத் தலைமையை ரெலோவுக்கு விட்டுக் கொடுத்திருந்தது கூட்டமைப்பு.

அதன் தலைவராக இருந்த ரெலோ உறுப்பினர் கொரோனாத் தொற்றினால் காலமாக அந்த இடத்துக்கு புதிய தெரிவு இடம் பெற்றது.

சபை ரெலோவிடம் கையளிக்கப்பட்டமையால், காலமான நகர சபைத் தலைவரின் இடத்துக்கு ஒருவரை நியமித்தல், புதிய தலைவர் தெரிவு போன்றவற்றைக் கையாளும் பொறுப்பு ரெலோவிடம் வழங்கப்பட்டது.

ரெலோவோ, அக்கட்சியிலிருந்தும் கூட்டமைப்பிலிருந்தும் விலகி, தனிக் கட்சி அமைத்து, விக்னேஸ்வரனுடன் கூட்டுச் சேர்ந்து, கூட்டமைப்பைப் போட்டுப் பிடித்து வரும் சிவாஜிலிங்கத்திடம் அந்தப் பொறுப்பைத் தன்பாட்டில் ஒப்படைத்தது.

நகர சபையின் உப தலைவராகவும், தொடர்ந்தும் முழு அளவில் ரெலோ உறுப்பினராகவும், கூட்டமைப்பின் உண்மையான அங்கத்தவராகவும் தொடர்ந்து இருந்து வரும் கேசவன் என்பவரைப் புறம் ஒதுக்கி விட்டு, ரெலோவுக்கும், கூட்டமைப்புக்கும் எதிராக வழக்காடி வரும் ஒருவரை சிவாஜிலிங்கத்தின் முன்னெடுப்பில், கூட்டமைப்பு வேட்பாளராக நிறுத்தியது ரெலோ.

மேற்படி உப தலைவர் கேசவன் இவ்விடயத்தை ஒட்டி சுமந்திரன் மற்றும் கூட்டமைப்புத் தலைவர்களுடன் ஆலோசனை கலந்து விட்டு, சிவாஜிலிங்கத்தின் வேட்பாளருக்கு எதிராக வாக்களித்தார்.

அதனால், ரெலோ – சிவாஜி தரப்பின் வேட்பாளர் தோற்றுப் போக சுயேச்சைக் குழுவின் செல்வேந்திரா நகர சபைத் தலைவரானார்.

இன்று சபையின் அடுத்த வருடத்துக்கான வரவு – செலவுத் திட்டம்.

மேற்படி ரெலோ – சிவாஜி அணியின் திட்டத்துக்கு மாறாக கடந்த தலைவர் தெரிவில் வாக்களித்த உப தலைவர் கேசவனுக்கு இப்போது சிவாஜி அணி வலை விரித்திருப்பதாகத் தகவல்.

இன்று நடைபெறும் வரவு – செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதுடன் இரண்டு வாரங்களில் மீளச் சமர்ப்பிக்கப்படும் வரவு – செலவுத் திட்டத்தையும் தோற்கடித்தால், மீண்டும் ஒரு தடவை தலைவர் தெரிவு வரும். அப்போது – இம்முறை – தலைவர் பதவியை உப தலைவர் கேசவனுக்கு வழங்குவோம் என்று சிவாஜி அணி மேற்படி கேசவனுக்குக் கடைசி நேரத்தில் கயிறு கொடுத்திருப்பதாகத் தகவல்.

சுமந்திரனும் நாட்டில் இல்லாதமையால் என்ன செய்வது என்று தடுமாறும் கேசவன், நகர சபைத் தலைவர் பதவி கிட்டும் என்ற நப்பாசையில் பல்லிளித்துக் கொண்டு போய் சிவாஜி தரப்பின் சதி வலைக்குள் சிக்குப்பட்டிருக்கிறார் எனவும் தெரிகின்றது.

சபையில் உள்ள சைக்கிள் கட்சி, அமுல் பேபி தரப்பு ஆகியவற்றின் உறுப்பினர்களின் முடிவில்தான் சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த கணக்காளர் செல்வேந்திராவின் நகர சபைத் தலைமைப் பதவி இன்று தப்பிப் பிழைக்குமா என்பது தங்கியுள்ளது. பார்ப்போம் என்ன நடக்கின்றது என்பதை...!

★ ★ ★

கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நேற்றைய போராட்டத்துக்காக வெளியிடங்களில் இருந்து பஸ்களில் வந்தவர்கள் கொழும்புக்குள் வர அனுமதிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டனர். கொழும்பிலும் இந்தப் போராட்டத்துக்கு மக்களைச் செல்ல விடாமல் பல இடங்களிலும் வீதி மறிப்புத் தடுப்புக்களைப் போட்டுப் பொலிஸார் தடுத்தனர்.

இந்தச் செய்தி நேற்று நாடாளுமன்றத்துக்கு எட்டிய போது அங்கிருந்த ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் கொதித்துப் போய் ஆக்ரோஷமாக அரசைச் சாடி சபையில் உரையாற்றினர். கண்டனங்களும் தெரிவித்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸாவும் தமது உரையில் சீறினார். அச்சமயம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைப் பார்த்து அவர் ஒரு கேள்வி எழுப்பினார். இது 1990 முற்பகுதியில் நடந்த சம்பவம் பற்றியது.

"பிரதமர் அவர்களே! எனது தந்தையார் ரணசிங்க பிரேமதாஸா ஜனாதிபதியாக இருந்த போது அவரது அரசைக் கவிழ்ப்பதற்காக உங்களின் சுதந்திரக் கட்சி கொழும்பிலிருந்து கதிர்காமத்துக்கு ஓர் எதிர்ப்புப் பாதயாத்திரையை நடத்தியது. அதை நீங்கள் முன்னின்று நடத்தினீர்கள். மக்கள் பல பகுதிகளில் இருந்தும் வந்தார்கள். நாட்டின் தலைவராக இருந்த எனது தந்தையார் உங்களில் யாரையாவது குழப்பினாரா? ஏதாவது தடையை ஏற்படுத்தினாரா? இல்லையே. மாறாக, உங்களின் பாதயாத்திரைக்கு முழுப் பாதுகாப்புக் கொடுத்தார். அந்த முன்னுதாரணம் உங்களுக்குத் தெரியாதா? உங்கள் அரசு இப்போது ஜனநாயக ரீதியில் மக்கள் வெளிப்படுத்தும் எதிர்ப்பை, இப்படி இரும்புக் கரம் கொண்டு எதேச்சாதிகாரமாக அடக்க முயல்வது நீதியானதா?" – என்ற சாரப்படக் கேள்வி எழுப்பினார் சஜித்.

இது நிச்சயம், பிரமரின் மனதைத் தொட்டு, அவரை நெகிழ வைத்திருக்கும் என்று நினைக்கின்றேன்.

– மின்னல் –

---

## அரசு வீட்டுக்குச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பட்டினியால் வாடவேண்டிய நிலைமை இன்று நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. எல்லாவற்றுக்கும் வரிசையில் நிற்க வேண்டிய வரிசை யுகமும் உருவாகியுள்ளது. ஆனால் 'கொமிஷன்' மூலம் ஆட்சியை முன்னெடுக்க ஆட்சியாளர்கள் முற்படுகின்றனர்.

ஊழல், மோசடிகளுக்கு எமது ஆட்சியில் முற்றுப்புள்ளி வைக்கப்படும். பெயர்களைப் பார்த்து பதவிகள் வழங்கப்படாது. திறமைக்கே முன்னுரிமையும், முதலிடமும் வழங்கப்படும். மக்கள் ஆட்சி ஊடாக மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் யுகத்தை உருவாக்குவோம்.

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் போராட்டத்தில் பங்கேற்ற உங்கள் அனைவருக்கும் நன்றிகள்.

இது எமது தாய்நாடு. இங்கு வாழ்பவர்கள் எமது மக்கள். எனவே, தாய் நாட்டைக் காக்க, மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, புத்தாட்சியை உருவாக்க நடவடிக்கை எடுப்பேன் – என்றார்.

---

## 'சஜித் கொத்தணி'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் கூறியதாவது:–

மக்களை வீதியில் இறக்கி, சீரற்ற கால நிலையில் அவர்களை வதைப்படுத்தி அரசியல் நடத்தும் நேரம் இதுவல்ல. நாட்டில் கொரோனா இருப்பது எதிரணி உறுப்பினர்களுக்குத் தெரியாதா? அவர்களுக்குத் தெளிவில்லை என்பதுதான் அவர்களின் நடத்தைமூலம் அறியமுடிகின்றது.

ஆரம்பத்தில் ஆடைத்தொழிற்சாலை கொத்தணி ஏற்பட்டது. அதன்பின்னர் புத்தாண்டு கொத்தணி உருவானது. ஆசிரியர்களின் போராட்டத்தாலும் கொத்தணி பரவியது.

சஜித்தின் போராட்டத்தில் சஜித் கொத்தணியும் உருவாகும் அபாயம் உள்ளது. எமது அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் உள்ளது. தேர்தல் ஊடாக அரசை வீழ்த்துங்கள். மாறாக மக்களைப் பணயம் வைக்க வேண்டாம் – என்றார்.

---

## மக்களின் போராட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

கொழும்பு மேலதிக நீதிவான் ரஜிந்தா ஜயசூரியவினால் இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

மக்கள் போராட்டத்தைத் தடுத்த நிறுத்த முடியாது எனத் தெரிவித்து நீதிவான் பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்தார்.

## எரிபொருள் தாராளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பிலும் கையிருப்பில் உள்ளது – என்று யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

நேற்று மதியம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ் மாவட்டத்தில் போதியளவு எரிபொருள் கையிருப்பு உள்ளது. மாவட்டத்துக்கான எரிபொருள் விநியோகமும் சீராக இடம் பெறுகிறது. அதனால் பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து எரிபொருளை நிரப்ப வேண்டிய அவசியமில்லை.

-வடமாகாண பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளருடன் நாம் தொடர்பு கொண்டு கேட்டபொழுது நேற்றைய நிலையில் காங்கேசன்துறை பெற்றோலிய கூட்டுத்தாபன களஞ்சியசாலையில் 26 லட்சம் லீற்றர் டீசலும், 155,000 லீற்றர் 92 ஒக்ரைன் பெற்றோலும், 165,000 லீற்றர் மண்ணெண் ணெயும் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. 66,000 லீற்றர் 92 ஒக்ரைன் பெற்றோல் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

பெற்றோல் விநியோகத்தை தங்கு தடையின்றி மேற்கொள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஆகவே பொதுமக்கள் முண்டியடித்து தட்டுப்பாடு வருவதாகக் கருதி அதிகமாக கொள்வனவு செய்து களஞ்சியப் படுத்தாமல் தேவையான அளவை மாத்திரம் கொள்வனவு செய்யுங்கள்.

அதிகளவு கொள்வனவு காரணமாக சில பெற்றோல் நிலையங்களில் செயற்கை தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வதந்தியால் ஏற்பட்ட நிலைமை என்றே இதனை நாங்கள் கருதுகின்றோம். தேவையான எரிபொருள் கொழும்பில் கையிருப்பில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே யாழ் மாவட்ட மக்கள் தயவு செய்து கொள்வனவை அதிகரித்த அளவில் செய்ய வேண்டாம். இதனால் கறுப்பு சந்தையிலே விலைகள் அதிகரித்து விற்பனை செய்யப்படுவதாகவும் நமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவ்வாறு செய்ய வேண்டாமென விநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம். பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோகத்தர்களுக்கு இது தொடர்பில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறான காரியங்கள் தொடருமாக இருந்தால் பங்கீட்டு அடிப்படையில் விநியோகம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படலாம்.

அரசாங்கமும் தட்டுப்பாடு ஏற்படாது என கூறி வருகின்றது. பொதுமக்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். – என்றார்.

---

## மக்களைத் தடுத்துத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கொள்ளும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவினால் நேற்றுப் பகல் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:–

ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் இன்று (நேற்று) ஏற்பாடு செய்திருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்பில் பொலிஸ்மா அதிபரால் மாகாணங்களுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர்கள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் ஆகியோருக்கு பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் குறித்து ஐக்கிய மக்கள் சக்தி உன்னிப்பாக கவனம் செலுத்தியுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் பேரில் பொலிஸ் மா அதிபரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் அரசாங்கத்தின் அரசியல் நலனுக்காக மேற்கொள்ளப்பட்டவை என்பது தெளிவாகிறது.

பொலிஸ்மா அதிபரின் உத்தரவு, அரசமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள மக்களின் கருத்து வெளியிடும் மற்றும் ஒன்றுகூடல் தொடர்பான அடிப்படை உரிமையை பாரதூரமாக மீறும் செயலாகும் என்பதை சுட்டிக்காட்டுகிறோம்.

ஆர்ப்பாட்டத்துக்கு பொலிஸ்துறை கோரிய தடை உத்தரவுகள் பல நீதிமன்றங்களால் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில்,பொலிஸ் மா அதிபரின் உத்தரவு நீதிமன்ற உத்தரவையும் தாண்டிய ஒன்றாக உள்ளது.

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட போதிலும் பிரதேச மட்டத்தில் வீதித் தடைகளை அமுல்படுத்துமாறு அறிவுறுத்தாத பொலிஸ்மா அதிபரால் தற்போது, இது போன்ற உத்தரவு பிறப்பிக்கப்படுவது முற்றிலும் அரசியல் தேவை கருதியதாகும்.

அத்துடன் வாகனங்களில் பயணிக்கும் நபர்களின் பெயர்ப் பட்டியலைத் தொகுப்பது, புகைப்படங்களை எடுப்பது என்று தனிமனிதரின் சுயாதீனத்துக்குக் கூட சவால் விடுக்கும் அளவுக்கு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதோடு, அந்த உத்தரவுகளின்படி செயல்படும் அதிகாரிகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம் – என்றுள்ளது.

---

## தரம் 6, 7, 8,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆகிய வகுப்புகளுக்கான கற்றல் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அரசு நேற்று அறிவித்துள்ளது.

---

## பொலிஸாரின் தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காலிமுகத்திடல் வரை சென்று அங்கு கவனயீர்ப்புப் போராட்டத்துடனான கூட்டம் நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தால் கொழும்பிலும், அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

இது ஆரம்பம் மட்டுமே. மக்களின் வாழும் உரிமை உறுதிப்படுத்தப்படும் வரை போராடுவோம். உயிர்த் தியாகம் செய்வதற்கும் நாம் தயார் என்று இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சூளுரைத்தனர்.

---

## கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது புதிய அலையின் ஆரம்பம் எனக் கூற முடியாது. ஆனால் அப்படி ஒரு நிலைமை ஏற்படாதென எங்களால் கூறமுடியாது. அதற்கு காரணம் தற்போதைய கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பாகும்.

கடந்த நாள்களாக காணப்பட்ட மக்களின் செயற்பாடுகளின் முடிவாகவே இந்த அளவுக்கு கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்துள்ளனர்.

இன்னும் சில நாள்களுக்குப் பிறகு அல்லது 10 முதல் 15 நாள்களுக்குப் பிறகு எங்கள் நடத்தை முறையின் விளைவாக அதிகரிக்கும் நோயாளிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

தற்போதைய நிலைமை தொடர்ந்தும் நீடித்தால் எதிர்வரும் நாட்களில் அடையாளம் காணப்படும் நோயாளிகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும்.

எனினும் இன்று நாங்கள் சிந்தித்து செயற்பட்டால் எதிர்வரும் 10 முதல் 15 நாள்களுக்கு அதிகரிக்கும் தொற்றாளர்களை எங்களால் தடுக்க முடியும்.

அதற்காக சுகாதார நடைமுறைகளை நாங்கள் உரிய முறையில் பிற்பற்றிச் செயற்படவேண்டும்.

உரிய முறையில் முகக் கவசம் அணிதல் உட்பட அனைத்து நடவடிக்கைகளையும் உரிய முறைய பின்பற்ற வேண்டும் – என்றார்.

# கீரிமலையில் சிவபூமியால் முதியோருக்கு ஆச்சிரமம்

ஈழத்து பிரசித்தி பெற்ற பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றாகிய நகுலேஸ்வரம் அமைந்துள்ள கீரிமலைப் புனித பிரதேசத்தில் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தால் அதன் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகனின் நெறிப்படுத்தலில் முதியோர்களுக்கான ஆச்சிரமம் நாளை (வியாழக்கிழமை) காலை 9 மணிக்கு திறந்துவைக்கப்பட உள்ளது.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆசியுரையை நல்லை குருமஹா சந்நிதான 2 ஆவது குரு முதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளும், அமெரிக்க கவாய் ஆதீனம், கோப்பாய் சுப்ரமணிய கோட்ட முதல்வர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகளும் வழங்குவர்.

சான்றோர்கள் வாழ்த்துரை வரிசையில் யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன், யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.ஶ்ரீசற்குணராஜா, யாழ்.இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், வலி.வடக்கு பிரதேச செயலர் ச.சிவஶ்ரீ, வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோர் வழங்குவர்.

கீரிமலையில் அமைந்துள்ள கிருஷ்ணபிள்ளை மடம் யுத்தத்தால் அழிவடைந்துள்ளது. இந்த



மடத்தை நிர்வகித்த குடும்பத்தினர் அந்த மடம் இருந்த காணியை சிவபூமி அறக்கட்டளையினருக்கு நற்காரியமாற்றுவதற்காகப் பெருமனதுடன் வழங்கியுள்ளார்கள். அந்தக் காணியில் வேறும் சில நல்லுள்ளம் படைத்த அன்பர்களின் நிதியுதவியால் சகல வசதிகளும் கொண்ட 15 அறைகளுடனும், நாச்சார் முற்றம், நூலகம், ஆலயம் என்பவற்றுடனும் முதியோர் மகிழ்வாக இழைப்பாறும் வண்ணம் இந்த முதியோர் ஆச்சிரமம் அமைக்கப்பட்டுள்ளது என்று சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

# 60 வயதுக்கு மேற்பட்டோருக்குத் தடுப்பூசி 3 ஆவது டோஸ் வழங்கல் இன்று ஆரம்பம்

இலங்கையில் ஏற்கனவே இரண்டு கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்ட 60 வயதுக்கு மேற்பட்ட பொது மக்களுக்கு மூன்றாவதாக பைஸர் 'பூஸ்டர்' தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை இன்று முதல் ஆரம்பமாகின்றது.

முதல் கட்டமாக மேல், தென் மாகாணங்கள், அநுராதபுரம் மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இன்று முதல் மூன்றாவது தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை ஆரம்பமாகும். தொடர்ந்து ஏனைய பகுதிகளுக்கும் இது விரிவுபடுத்தப்படும்.

ஏற்கனவே இரண்டுதடுப்பூசிகளையும் போட்டு 3 மாதங்கள் முடிந்தவர்கள் 3 ஆவது பைஸர் தடுப்பூசியைப் பெறத் தகுதியுடையவர்களாவர்.

முதல் கட்டமாக, சுகாதாரத் துறையினர், முப்படையினர், பொலிஸார், சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் முன்களப் பணியாளர்களுக்கு மூன்றாாவது பூஸ்டர் தடுப்பூசி போடும் நடவடிக்கை கடந்த



முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், 60 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் இன்று முதல் பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை ஆரம்பமாகின்றது. அதன்பின்னர் 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படும். இதற்காக ஒரு கோடி 45 லட்சம் பைஸர் தடுப்பூசிகளை வாங்க அரசு திட்டமிட்டுள்ளது.


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## VACANCY

Applications are hereby invited up to 30th November, 2021 from suitably qualified persons for the following post.

**POST OF MANAGEMENT ASSISTANT (SHROFF), GRADE III**

**Qualifications:**

**1)** Should have passed G.C.E(Ordinary Level) Examination in six subjects at one sitting with credit passes in
i) Sinhala Language/ Tamil Language
ii) English Language/ English Literature
iii) Mathematics
**AND**

**2)** Should have Passed in all subjects at G.C.E.(Advanced Level) examination (except the Common General Paper) at one sitting. One of the subjects should be Accountancy.

**3)** Preference will be given to those who possess the following;
**a.** An acceptable qualification in computer applications of not less than six (06) months duration obtained from a recognized institute.
**&**
**b.** Two years of experience in the use of computer application packages

**Age:** Should be not less than 18 years and not more than 30 years of age on 30.11.2021

**Salary Scale :** U-MN1 (IIIA) - Rs.30,725-17x300-35,825 p.m

**Selection** : By Written Examination and Interview

***Note: Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.***

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Universities Pension Scheme in the University System.
3. Gratuity payment.
4. Employment trust fund.
5. Free Medical Care.

Applications should be on **specified form** issued by the University. Application Form, University specified pay-in-voucher and other particulars for the above posts can be **downloaded only from the University website - www.jfn.ac.lk.**

Applicants should deposit the Application Fee of Rs.100.00 at any branch of the People's Bank in favour of **University of Jaffna Collection Account Number: 9700 0009 0000 387.** A copy of the Bank Deposit Slip should be attached with the application as the proof of the payment of Application Fee.

**Sample Deposit Slip is given below:**




**Copies of certificates in support of the Educational/Professional qualifications and experience as at the closing date of the applications must be attached to the applications.**

The envelope containing the duly filled application form must bear Title of the Post as Management Assistant (Shroff) on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of **the Deputy Registrar/ Non-Academic Establishments, University of Jaffna,** P.O. Box 57, Thirunelvely, Jaffna on or before **30.11.2021.**

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.
Incomplete and illegible applications and applications that are received after the closing date and without the copies of certificates will be rejected without intimation.

**REGISTRAR,**
**UNIVERSITY OF JAFFNA.**
**15.11.2021.**

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# சரித்திரம் திரும்புகின்றது

**சரித்திரம் திரும்புகின்றது.**

**நேற்று கொழும்பில் அரங்கேறிய நிகழ்வு அதனைத் தான் எடுத்துக் கூறி நிற்கின்றது.**

**2015, ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் அப்போதைய எதிரணியின் கூட்டினால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டு, மெதமுலனவுக்குத் திருப்பி அனுப்பப் பட்ட போது, ராஜபக்ஷக்களின் அரசியல் எதிர்காலத் துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டாயிற்று என்ற முடி வுக்குத்தான் எல்லோரும் வந்தனர்.**

**ஆனால், சரியாக இரண்டு ஆண்டுகளின் பின்னர் – 2017 மே முதலாம் திகதி – கொழும்பு காலி முகத்திட லையே ஜனசமுத்திரத்தினால் நிறைக்கும் மக்கள் கூட்டத் துடன் தமது மேதின நிகழ்வை – பொதுஜன பெரமுன வின் கூட்டத்தை – ராஜபக்ஷக்கள் நடத்திக் காட்டிய போதுதான், மீண்டும் ராஜபக்ஷக்கள் யுகம் அரங்கேறப் போகின்றது என்ற புதிய காதைக்கு முன்னுரை எழுதப் பட்டது.**

**அதே சரித்திரம் மீண்டும் திரும்புகின்றது.**

**2019 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் பதின்மூன்றரை லட்சம் வாக்குகளினால் கோட்டாபய ராஜபக்ஷ வென்ற போதும் –**

**அதைத் தொடர்ந்து 2020 ஒகஸ்டில் பொதுத் தேர்த லில் ராஜபக்ஷக்களின் அணி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆசனங்களுடன் வரலாற்று வெற் றியை ஈட்டிய போதும் –**

**எதிர்க்கட்சிகளின் கதை முடிந்து விட்டது, இனி ராஜ பக்ஷக்களின் அதிகாரத்தை அசைக்க முடியாது என் றெல்லாம் முடிவு கட்டப்பட்டது.**

**ஆனால், 2017 மே தினத்தன்று காலி முகத்திடலில் எள் போட்டால் விழ இடமில்லாதவாறு ஜனசமுத்திரத்தை நிறைந்து, தமது மீளெழுச்சியை ராஜபக்ஷக்கள் பறை சாற்றியமை போன்று, கொழும்பு நகரின் மத்தியில் நேற்று ஜனசமுத்திரத்தைத் திரட்டிக் காட்டி ராஜபக்ஷக் களின் வீழ்ச்சிக்குக் கட்டியம் கூறியிருக்கின்றது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி.**

**2017 இல் காலி முகத்திடலில் ராஜபக்ஷக்கள் கூட்டிய மே தினக் கூட்டத்துக்கும், நேற்று சஜித் பிரேமதாஸா தரப்பு அதே காலிமுகத் திடலை ஒட்டி நடத்திய கூட்டத்துக் கும் மிக முக்கிய வேறுபாடு உண்டு.**

**அது – பல வாரங்களாகத் திட்டமிட்டு, நாட்டின் மூலை முடுக்குகள் எங்கிருந்தும் பல நூற்றுக் கணக்காக பஸ்களில், பல்லாயிரம் பேரைத் திரட்டி வந்து நடத்திய கூட்டம். அதற்கு யாரும் தடையையோ, எதிர்ப்பையோ காட்டவில்லை – அப்போதைய அரசு உட்பட.**

**ஆனால், நேற்று ஐக்கிய மக்கள் சக்தி நடத்திய கூட்டம் அப்படியல்ல. கடைசி நேரத்தில் புதிய சுகாதார விதிமுறை களை திட்டமிட்டு வர்த்தமானியில் அறிவித்து, அதன் மூலம் மக்கள் கூடுவதற்குச் சட்ட ரீதியாகத் தடை விதித்து, அந்த வர்த்தமானி அறிவித்தலுடன் நீதி மன்றங்கள் தோறும் பொலிஸார் அலைந்து, ஆங் காங்கே நீதிமன்றத் தடை உத்தரவுகளையும் பெற்று, மக்கள் போக்குவரத்துக்கு பொலிஸ் மூலம் தடைகளை ஏற்படுத்தி, பஸ் போக்குவரத்தை முற்றாக முடக்கி, மக் களை நகர விடாமல் இறுக்கி, பல திருகுதாளங்களை ஆட்சிப் பீடம் முன்னெடுத்தது.**

**அந்தத் தடைகளை எல்லாம் தகர்த்து, சுகாதார விதி முறைகள், கட்டுப்பாடுகளைப் புறமொதுக்கி, நேற்றைய எழுச்சியில் பல்லாயிரம் மக்கள் உணர்ச்சியுடன் பங்கு கொண்டமை நிச்சயமாக ராஜபக்ஷக்கள் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கும்.**

**2017 மேயில் ராஜபக்ஷக்களுக்கு ஆதரவாக மே தினத்தில் மக்கள் சமுத்திரமாகத் திரண்டமை – அவர்கள் மீதான அனுதாபத்தில்!**

**நேற்று அதே காலி முகத்திடலில் பொலிஸ் தடை யையும் மீறி மக்கள் திரண்டமை – அதே ராஜபக்ஷக்க ளின் ஆட்சி மீதான விரக்தியின் உச்சத்தில்!**

**எது, எப்படியோ சரித்திரம் திரும்புகின்றது என்பது மட்டும் உண்மை.**

# பாதைகளில் வெள்ள நீரை வெட்டி விடுவதை தடுக்குக!

## ஜனாதிபதி, ஆளுநருக்கு சங்கானை மக்கள் கடிதம்

மனிதாபிமானமற்ற முறையில் குடியிருக்கும் பாதைக்குள் வெள்ள நீரை வெட்டிவிட்டு சேதம் விளைவிக்கும் அரச உயரதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகளை தடுத்து நிறுத்தக்கோரி வடக்கு மாகாண ஆளுநருக்கு மக்கள் கடிதம் எழு திய சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

மனிதாபிமானமற்ற முறையில் குடியிருக்கும் பாதைக்குள் வெள்ள நீரை வெட்டிவிட்டு சேதம் விளைவித்தமையால் பாதிப்படைந்த வீதி யைப் புனரமைத்து தருமாறு ஜனாதிபதி மற்றும் வடமாகாண ஆளுநருக்கு சங்கானை பகுதி மக்கள் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

நாம் குடியிருக்கும் வீதியில் பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அண்மையில் பெய்த அடை மழையில் பெரும் வெள்ளம் ஏற்பட்டது. குறிப்பாக சங்கானை 7 ஆம் கட்டை, பாரதி வீதியிலுள்ள குடிமனையில் உள்ள வெள்ள நீரை கால்வாய்கள் மூலம் வெளியேற்றாமல் வலிகாமம் மேற்கு பிரதேசபைத் தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் ஆகியோரின் நடவடிக்கையால் வெள்ள நீர் வெட்டப்பட்டு சுமார் 150 மீற்றர் தற்காலிக வாய்க்கால் அமைத்து பாரதி வீதிக்கு அடுத்ததாக உள்ள வலி.தென்மேற்கு பிரதேசசெயலர் பிரிவிற்குள் அமைந்துள்ள வலி.தென்மேற்கு பிரதேசசபை யில் பதிவு செய்யப்பட்ட காரைநகர் மானிப்பாய் முதலாம் வீதிக்குள் வெள்ளநீர் திருப்பப்பட்ட நிலையில் அவ்வீதி முற்றாகப் பாதிப்படைந் துள்ளது.

இந்தச் செயற்பாடு தொழிநுட்ப ஆலோசனை பெறப்படாமையால் வீதிக்குள் விடப்பட்ட வெள்ள நீர் வீதிக்குள் உள்ள வதிவிடங்களுக்கு ஊடாக குருதிச்சுற்றோட்டம் போன்று மீண்டும் 7 ஆம் கட்டை பாரதி வீதிக்குச் சென்று மீண்டும் எமது வீதி ஊடாக வெள்ள நீர் செல்லும் இடம் தெரியாமல் சுற்றித்திரிகிறது.

இந்த விடயம் தொடர்பாக சங்கானை பிரதேச செயலாளர், வலி.மேற்கு தவிசாளர் மற்றும் சங்கானையில் உள்ள பொது அமைப்பு களிடம் இந்த விடயங்கள் தொடர்பில் கேட்ட போது இந்தச் செயற்பாட்டிற்கும் தமக்கும் தொடர்பு இல்லை என அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் தெரிவிக்கின்றனர். ஆனால் தாமே அதனை செய்தோம் என தமக்கு ஆதரவான முகப்புத்தகங்களில் பதிவேற்றம் செய்துள்ளனர்.

இவர்களது இந்தச் செயற்பாட்டால் இரு பிரதேசங்களின் எல்லையில் பிரச்சினையை உருவாக்கும் முயற்சியில் இவர்கள் ஈடுபடுகின்ற னர் என எண்ணத் தோன்றுகின்றது.

வெள்ளநீரை வெளியேற்றுகிறோமென செயற்படுபவர்கள் குறித்த நீர் எங்கு செல்கின்றது என்பதை ஆய்வு செய்யாமல் தமது அதிகாரங் களைத் துஷ்பிரயோகம் செய்துள்ளார்கள். இத்தகைய பிரச்சினையைத் துரிதமாகத் தீர்த்துவைக்கவேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ச்சியாக நோய் தொற்றுக்குள்ளாகி வருகின்றனர் எனவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாவகச்சேரி பிரதேச சபையின் பாதீடு ஏகமனதாக நிறைவேற்றம்

சாவகச்சேரி பிரதேசசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் இடம்பெற்ற அமர்வின் போதே வரவு - செலவுத் திட்டம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

31 உறுப்பினர்களைக் கொண்ட சாவகச்சேரி பிரதேசசபையில் குறித்த அமர்வில் 28 உறுப்பினர்கள் பங்கேற்ற நிலையில் 24 உறுப்பினர்கள் பாதீட்டை ஏகமனதாக ஏற்றுக்கொண்டிருந்தனர். அதே சமயம் அமர் வில் கலந்துகொண்ட 4 உறுப்பினர்கள் வாக்கெடுப்பிற்கு முன்னராக தவிசாளரின் அனுமதி பெற்று வேறு தேவைகளுக்காக கூட்டத்தை விட்டு வெளியேறியிருந்தனர்.

இது தொடர்பாக பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் கருத்துத் தெரிவிக்கையில்:-

இதனை மிகச் சிறந்த தருணமாக உணர் கிறேன். 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் இன்று 24 உறுப்பினர்களுடைய ஆதரவோடு நிறை வேறியுள்ளது.

உத்தேச வருமானம் 13.7 கோடி ரூபா என்ற அடிப்படையில் பாதீடு தயாரிக்கப்பட்டுள் ளது. அதில் சபையின் 31 உறுப்பினர்களுக்கும் தலா 7 லட்சம் ரூபா வட்டார அபிவிருத்திக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சபையில் நிறை வேற்றப்பட்ட வரவு - செலவுத் திட்டம் 14 தினங்கள் மக்கள் பார்வைக்கு வைக்கப்படும்.

சாவகச்சேரி பிரதேசசபை, பிரதேசசபையின் உப பணிமனைகள் மற்றும் பிரதேச செயல கம் ஆகிய இடங்களில் மக்கள் பார்வைக்கு வைக்கப்படும் என மேலும் அவர் தெரிவித்தி ருந்தார்.

# வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றம்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் கடந்த திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு சபைக்கூட்ட மண்டபத்தில் தவிசாளர் கருணாகரன் தர்ஷன் தலைமையில் நடை பெற்றது.

30 உறுப்பினர்களை அங்கத்தவர்களாக கொண்ட மேற்படி சபையில் 25 உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு வரவு - செலவுத் திட்டத்தை ஏகமனதாக அங்கீகரித்தனர். இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 11 உறுப்பினர்களும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த 06 உறுப்பினர் களும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 03 உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த 03 உறுப்பினர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த 02 உறுப்பினர்களும் கலந்து கொண்ட மையுடன் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 04 உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 01 உறுப்பினரும் கூட்டத்துக்கு சமுகமளிக்க வில்லை.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2021



‘பொருள்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற்கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதை விட அது பச்சையாக இருப்பதே அதி உன்னதமானது ”

- மார்ட்டீன் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)


கண்ணீர் அஞ்சலி
பிறப்பு
11
04
1942
இறப்பு
16
11
2021
எமது அன்பு நண்பன் கிருபாகரன் (கிருபா லேணர்ஸ்)
அவர்களின் பாசமிகு தந்தையார்
அமரர் நாகரட்ணம்
அழகசுந்தரம்
கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்.
றோட்டறிக் கழக நண்பர்கள்

# அரச அதிகாரிகளைத் தொடர்ச்சியாக அச்சுறுத்துகின்றார் சுமனரத்ன தேரர்

## சாணக்கியன் கண்டனம்



மட்டக்களப்பு மங்களராம விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரர் தொடர்ச்சியாக பொதுமக்களை அச்சுறுத்தி வரும் நிலையில், பொலிஸார் கைகட்டி அதனை வேடிக்கை பார்க்கின்றனர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் விசனம் வெளியிட்டுள்ளார்.

மட்டக்களப்பு மங்களராம விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரர் மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளரின் அறையை முற்றுகையிட்டு கடந்த திங்கட்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

இதன்காரணமாக திங்கட்கிழமை பட்டிப்பளை பிரதேச செயலகத்தின் நடவடிக்கைகள் முற்றாக முடங்கியிருந்தன.

பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கெவிழியாமடு பகுதியில் வன திணைக்களத்துக்குரிய காணியை விகாரை அமைப்பதற்குக் கோரியதாகவும் அதனை வழங்குவதற்குத் தனக்கு அதிகாரம் இல்லையென பிரதேச செயலாளர் தெரிவித்தமையை தொடர்ந்தே இந்தப் போராட்டத்தை அந்த மத குரு முன்னெடுத்திருந்தார்.

இந்தநிலையில் இதற்குக் கண்டனம் தெரிவித்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இரா.சாணக்கியன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் –

பிரதேச செயலாளரையும் ஊழியர்களையும் அச்சுறுத்தும் வகையில் மேற்படி மத குரு போராடிவருகிறார் எனவும் பொலிஸார் அவரை அங்கிருந்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கெவிழியாமடு பகுதியில் வன திணைக்களத்துக்குரிய காணியை விகாரை அமைப்பதற்கு மட்டக்களப்பு மங்களராம விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரர் கோரியுள்ளார்.

அதனை வழங்குவதற்குத் தனக்கு அதிகாரம் இல்லையென பட்டிப்பளை பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் தெரிவித்தமையைத் தொடர்ந்தே இவர் அவரின் அறையை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தியிருந்தார்.

இதன்காரணமாக பட்டிப்பளை பிரதேச செயலகத்தின் நடவடிக்கைகள் முற்றாக முடங்கியிருந்தன. பிரதேச செயலாளரையும், அரசாங்க ஊழியர்களின் நடவடிக்கைக்கு அச்சுறுத்தும் வகையில் இந்தப் பிக்குவின் நடவடிக்கைகள் காணப்பட்டன.

அங்குள்ள ஊழியர்கள் வீதியில் இறங்கி மேற்படி பிக்குவை கைது செய்யக்கோரி போராட்டம் நடத்திய போதும் மக்களையும் ஊழியர்களையும் காப்பாற்ற வேண்டிய பொலிஸார் அவரை அங்கிருந்து அப்புறப்படுத்தாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தனர்.

பெண் ஒருவர் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் போது இவர்கள் கைகட்டி வேடிக்கை பார்த்தமை ஏனோ. எமது மக்களுக்கு இந்த நாட்டில் எவ்விதப் பாதுகாப்பும் இல்லை. வாழும் உரிமையும் இல்லை.

இவரின் இவ்வாறான செயற்பாடுகளானவை எமது மாவட்டத்தில் தொடர்ந்தும் நடைபெற்றுகொண்டு வருகின்றன. நாடாளுமன்றத்தில் கூட இவரின் செயற்பாடுகள் பற்றி எடுத்துரைத்திருந்தேன்.

இவரால் எமது மக்களும் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றனர். தற்போது ஒரே நாடு ஒரே சட்டம் அமுல்படுத்தப்படுவது இதுதானா என்ற கேள்விக்குறி எழுகின்றது.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு மக்கள் மற்றும் இளைஞர்கள் எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் அரச தரப்பு அரசியல்வாதிகளை நம்பி இருந்து எவ்விதப் பலனும் கிடைக்கப்போவதில்லை.

எமது மக்களே மேன்மேலும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றனர். எமது மக்களுக்கான பாதுகாப்பும் கேள்விக்குறியாகியுள்ளது. – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# 10 லட்சம் மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுவிட்டது

இலங்கையில் பாடசாலை மாணவர்கள் 10 லட்சம் பேருக்கு கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைவாகவே, பாடசாலை மாணவர்கள் 10 லட்சம் பேருக்கு பைஸர் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசி வழங்குமாறு சுகாதாரப் பிரிவினருக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்தமைக்கு அமைவாகத் தடுப்பூசி செலுத்தும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பட்டிப்பளை பிராந்திய மக்கள் பணிமனை அமைச்சர் வியாழேந்திரனால் திறந்துவைப்பு





பின்தங்கிய கிராம அபிவிருத்தி, மனைசார் கால்நடை மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனால் பட்டிப்பளை பிராந்தியத்துக்கான மக்கள் பணிமனை அலுவலகம் கடுக்காமுனையில் கடந்த திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

முற்போக்குதமிழர் அமைப்பின் பிரதான இணைப்பாளரும் மண்முனை தென் மேற்கு பிரதேச சபையின் பிரதேச சபை உறுப்பினருமான வை.சந்திரமேகன் உள்ளிட்ட முற்போக்குத் தமிழர் அமைப்பின் இணைப்பாளர்களின் தலைமையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது இராஜாங்க அமைச்சருக்கு மண்முனை பாலத்திலிருந்து அமோக வரவேற்பளிக்கப்பட்டு, வாத்திய இசை முழங்க, வாகனப் பேரணியாக அழைத்து வரப்பட்டதைத் தொடர்ந்து, இராஜாங்க அமைச்சரால் நாடா வெட்டி மக்கள் பணிமனை மிகவும் கோலாகலமாகத் திறந்துவைக்கப்பட்டது.

**Jaffna College Institute of Technology**
**Calls for the following courses**

**Computer Certificate Courses** *( 3 – 4 months Part time)*

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

**Commencement in November 2021**
**At Our Jaffna Centre along**
**(Jaffna College Undergraduate dept. Building)**
**464 Hospital Road**
**Jaffna.**
**For further details contact**
**Tel no: 0212250975/0212223382**
**Email: ejcit@sltnet.lk.**

# கொரோனாவைக் கட்டுப்படுத்தவே பொலிஸார் பாதுகாப்புக் கடமையில்

## பொதுப்பாதுகாப்பு அமைச்சர் வீரசேகர கூறுகிறார்

கொழும்பு, நவ. 17

கொரோனா நோய்த் தொற்று மேலும் பரவாமல் தடுப்பதற்காக வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களைப் பராமரிக்கவே சுகாதார அதிகாரிகளுக்கு பொலிஸார் உதவுகின்றனர் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்துள்ள பேரணியில் கலந்துகொள்ள நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை கொழும்பு நகருக்கு வருபவர்களைப் பொலிஸார் தடுத்தனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் கடுமையான குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் வீரசேகர இந்தக் கருத்தை வெளியிட்டார்.

தொற்றுநோயைக் கட்டுப்படுத்த அவர்கள் வழங்கிய வழிகாட்டுதல்களைப் பராமரிக்க மட்டுமே பொலிஸார் சுகாதார அதிகாரிகளுக்கு உதவினர் எனவும் தற்போது எதிர்க்கட்சிகள் செய்ய வேண்டியது வைரஸ் பரவலை எதிர்த்துப் போராட அரசுக்கு உதவுவதுதான் எனவும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும் அவை அரசாங்கத்தையும் மக்களையும் அழிக்க மட்டுமே வைரஸுக்கு உதவுகின்றன என்று அவர் மேலும் கூறினார்.

நாட்டின் பாதுகாப்பை தாங்கள் உறுதி செய்துள்ளோம் எனவும் பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பாக யாரும் கவலைப்பட வேண்டாம் என்றும் அவர் எதிர்க்கட்சி எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தார்.

பொலிஸார் வீடுகளுக்குச் சென்று மக்களை கொழும்பு நகருக்குள் வரவேண்டாம் என்று கூறினர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார் எனத் தெரிவித்த அவர், நீதித்துறை போராட்டத்தை நடத்த அனுமதித்துள்ள நிலையில், அவர்களால் எப்படி மக்களை இவ்வாறு தடுக்க முடியும்? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.



- செல்லத்துரை ரவீந்திரன் -


இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 194

**491. GTF இன் ஏதோ பேச்சுக்காக பேசுவோம் என்ற அனுகுமுறை சுமந்திரன் எடுத்துச் சென்றுள்ள பொறுப்பைப் பாதிக்குமா?**

நான் இதற்கு நீதியரசர் விக்னேஸ்வரன் 10 நவம்பர் 2021 காலைக்கதிரில் சொல்லிய செய்தியிலிருந்து ஒரு பகுதி



விக்னேஸ்வரன்

யைப்பாருங்கள் என்றுதான் சொல்வேன்.

"தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் உட்பட சர்வதேச சமூகத்துடன் தமிழர் தரப்பு பேச்சுவார்த்தைகளிலும், இராஜதந்திர செயற்பாடுகளிலும் ஈடுபடுவது அவசியம். சர்வதேச ரீதியான மத்தியஸ்தம் இல்லாமல் எமது பிரச்சினைக்கு நிலையான தீர்வு காணமுடியாது. அந்த அடிப்படையில் அமெரிக்காவுடன் பேசுவதற்கு தமிழ் அரசுக் கட்சிப்பிரமுகர்கள் செல்வதில் எந்தத் தவறும் இல்லை. இதில் எனக்கு எந்த விதமான காழ்ப்புணர்ச்சியோ பொறாமையும் இல்லை. எந்தப் பின்னணியில் அவர்கள் பேச்சுக்கு சென்றாலும் எமது மக்களின் அரசியல் தீர்வு தொடர்பான நிலைப்பாடுகளை அவர்கள் செல்லும் இடங்களில் தெளிவாக வலியுறுத்தும் வரையில் எனது ஆதரவு அவர்களுக்கு இருக்கும். அவர்கள் அவ்வாறு வலியுறுத்துவதால் முரண்பாடுகள் எதுவும் ஏற்படப்போவதில்லை.

இணைந்த வடக்கு கிழக்கில், சமஷ்டி அல்லது கூட்டுசமஷ்டி அடிப்படையிலான தீர்வே இலங்கையில் தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வாக அமைய முடியும். இதனையே அமெரிக்கா செல்லும் தமிழரசுக் கட்சியின் குழு வலியுறுத்த வேண்டும். இதனை நான் ஏற்கனவே இந்தக் குழுவில் அங்கம் வகிக்கும் எனது நண்பர்களுக்கு வலியுறுத்தியுள்ளேன்

அதே போல இனப்படுகொலைக்கான பொறுப்புக் கூறல், சர்வதேச விசாரணை ஆகியவை தொடர்பில் அவர்கள் பொறுப்புடன் நடந்து கொள்வதுடன் ஆட்சி மாற்றங்களுக்கான கருவிகளாக தமிழ் மக்கள் பயன்படுத்துவதற்கு இடமளிக்காமல் செயல்பட வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு." - என்றார் விக்னேஸ்வரன்.

எழுபது வருடங்களின் பின் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அனுமானங்களில் பேசமுடியாது என்பதோ முன்னெடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் அவை இருக்கத் தேவையில்லை என்பதோ எதுவித யதார்த்தமும் அற்றது.

**492. அதிக அதிகாரங்களை வழங்கும் ஒரு புதிய அரசியல் யாப்பை ஒட்டியா இந்தப் பேச்சுக்கள் இருக்கும்?**

அவைதான் இருக்கும் என்று கூறுவதற்கு இல்லை. கூட்டமைப்பினர் முன்னர் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் போகவில்லை. Zoom இல் ஆவது அமெரிக்க தூதுவர் மூலமாக இராஜாங்கத் திணைக்களத்திடம் பேசினார்களோ தெரியாது. ஆனால் இடையில் பஸில் ராஜபக்ஷவும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸும் அமெரிக்கா சென்று வந்தார்கள். அவர்கள் சுமந்திரனைச் சந்தித்தார்கள். அதன் பின்தான் இந்த ஏற்பாடுகள்.

கடந்து போன நல்லாட்சி காலத்தில், பிரிக்கப்படாத நாட்டுக்குள், ஒற்றையாட்சியின் கீழ் சுயாட்சி என்று விளங்கப்படக் கூடிய அளவில் அதிகாரப் பரவல் இருக்கக் கூடிய புதிய அரசியல் யாப்பு வரும் என்று கூறப்பட்டது. அது வரவில்லை. பின்னர் ஆட்சி மாற்றம் வந்தது. அந்த ஆட்சி 'ஒரே சட்டம்; ஒரே நாடு' என்ற குரலில் அதன்



பஸில் ராஜபக்ஷ

அமுலாக்கல் பௌத்தத்தின் கையிலிருக்கும் என்ற உறுதியோடு மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மையுடன் வந்தது. ஆகவே அதிக அதிகாரங்களை வழங்கும் அன்றில் சமஷ்டி முறையிலான ஒரு புதிய அரசமைப்பு வருவதற்கு ராஜபக்ஷக்கள் நிர்ப்பந்தத்தில் விரும்பினாலும், அவர்களுடனே உள்ள பேரினவாதம் அதற்கு அனுமதிக்குமா என்பது கேள்விக்குறியே.

அடுத்ததாக, விருப்பின்றி, தாங்கள்



ஜி.எல்.பீரிஸ்

நீதியாக நடக்க வேண்டும் என்ற உணர்வின்றி, அழுத்தத்தின் மேல் திணிக்கப்படும் அரசியல் யாப்பை நடைமுறையில் அமுல்படுத்த விரும்புவர்களா என்பதும் கேள்விக்குறியே. ஆகவே ஒரு சர்வஜன வாக்கெடுப்பின் அடிப்படையிலாவது சமஷ்டி அல்லது அதிக அதிகாரங்களை வழங்கும் புதிய அரசியல் யாப்பை சிங்களப் பரப்பின் பேரினவாதிகள் தோற்கடிப்பார்கள். அரசியல் யாப்பின் வரலாறுகள், அதில் வரும் சட்ட அமைப்புக்கள், தமிழ் மக்களின் உரிமைகளை நிறுத்துமா என்று புரிந்து கொள்ள வேண்டும். அதே சமயம் அமெரிக்க தரப்பில் ஈடுபடுபவர்களையும் பார்க்க வேண்டும்.

**493. ஏன்?**

இனப்படுகொலை பற்றிக் குறிப்பிட்ட பக்கங்களில் அப்பொழுது அமெரிக்காவின் பிரதிநிதியாக ஸ்ரீலங்காவிற்கு வந்த ரொபேர்ட் ஓ பிளேக் (Robert O' Blake) ஆற்றிய கருமங்களைச் சொல்லியிருந்தேன். அதனோடு அந்த இனப்படுகொலையில் அமெரிக்காவின் வகிபாகம் பற்றி மக்கள் நிரந்தரத் தீர்ப்பாயம் எடுத்துக்காட்டியவையும் தெரியப்படுத்தப்பட்டது. ஸ்ரீலங்காவுக்குத் தரப்பட்ட ஆயுத உதவிகள், பயிற்சிகள், விடுதலைப் புலிகள் அழிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு என்பனவெல்லாம் அவரது முன்னேற்பாட்டில் அமெரிக்காவின் இந்திய பசுபிக் கடல் கொள்கையின் வியூகங்களுக்காகச் செயற்படுத்தப்பட்டன. 2006 - 2009 வரை இலங்கைக்கும் மாலைதீவுக்கும் அமெரிக்க தூதுவராக இருந்து 2009இல் போரின் முடிவில் தென்மத்திய ஆசிய நாட்டின் துணைக் காரியதரிசியாக அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தில் பணியாற்றி, பின் 2014 - 2016 வரையும் இந்தோனேஷியாவின் தூதுவராகப் பணியாற்றினார். இவை எல்லாம் அமெரிக்காவின் இந்திய பசுபிக் கடல் எல்லைகளின் நாடுகளிலும் அதன் அதிகாரத்தை மேம்படுத்தவே.

அதன்பின் அவர் McLarty Associates என்ற தனிப்பட்ட சர்வதேச நிறுவனத்தின் சிரேஷ்ட இயக்குநராக தென் கிழக்கு ஆசிய பகுதியை நிர்வகித்து வருகிறார். இந்த நிறுவனமும் சர்வதேச நாடுகளின் பலம் வாய்ந்த முன்னைய அதிகாரிகளைத் தங்கள் வியாபார நலன்களுக்காக அரசுகளுக்கு அறிக்கைகள் தரவும் அந்நாடுகளின் பெரும் திட்டங்களில் தனிப்பட்டவர்களை முதலீடு செய்ய ஊக்குவிக்கவும் பணிக்கு அமர்த்தியுள்ளது.

ரொபேர்ட் ஓ பிளேக்கும் இப்போது இந்தச் சந்திப்புக்களில் ஈடுபடுகிறார். அது அவரது இந்திய பசுபிக் கடலில் மூலோபாய உத்திகளை ஒட்டியதாக அமையலாம் என்பது எனது கணிப்பு. அவற்றில் தமிழ் மக்களின் கடலெல்லைகள் கவனத்துக்கு வருமா, அது ஒரு வியூகத்தைத் தோற்றுவிக்குமா என்பது பொறுத்திருந்துதான் பார்க்கப்பட



சுமந்திரன்


வேண்டும்.

**494. இது அழிப்புக்கு துணை போனவர்களிடமே புத்தி கேட்பதா அமையாதா? அல்லது அவர்களின் வழியே போவதா?**

விதியை நோவதா? எமது மதியை நோவதா? இதனால் தமிழ்மக்களுக்குப் பாதை ஒன்று ஏற்படுமானால் அது வரவேற்கப்பட வேண்டும்.

அந்த வழியை மற்றவர்கள் ஆராயாமல் விடப்போகிறார்களா? கைகூடியும் காரியம் கெடலாம்.

(வளரும்......)



பிளேக்

# பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதே இம்முறை வரவு - செலவுத் திட்டத்தின் நோக்கம்

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு



கொரோனாத் தொற்று நிலைமை காரணமாகப் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதே இம்முறை வரவு - செலவுத் திட்டத்தின் நோக்கம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் மீதான இரண்டாம் நாள் வாசிப்பின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள முன்னேற்றகரமான முன்மொழிவுகள் எதிர்வரும் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் என்று பிரதமர் தனது உரையில் நம்பிக்கை தெரிவித்தார்.

இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் மீதான இரண்டாம் நாள் வாசிப்பின் போது பிரதமர் ஆற்றிய முழுமையான உரை வருமாறு-

மிகவும் சிறப்பான முறையில் தயாரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட அறிக்கையை நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ சமர்ப்பித்தமைக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து எனது உரையை ஆரம்பிக்க விரும்புகிறேன்.

பல துறைகளின் சவால்களுக்கு மத்தியில் இந்த வரவு - செலவுத் திட்டம் ஒரு முக்கியமான தருணத்தில் சமர்ப்பிக்கப்பட்டது என்றே கூற வேண்டும். இது முக்கியமாக கொவிட் - 19 பாதிப்பில் இருந்து பொருளாதாரத்தை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கொரோனாத் தொற்றுநோய் உலகம் முழுவதையும் பாதித்து மக்களைக் கடுமையாகப் பாதித்தது. அந்த தாக்கங்களில் இருந்து இலங்கையால் கூட விடுபட முடியவில்லை.

மேலும், கொரோனாத் தொற்றில் இருந்து மக்களைக் காப்பாற்ற நமது அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

நாம் முன்னெடுத்த செயற்பாடுகளின் ஊடாகப் பொருளாதாரத்தை விரைவில் இயல்பு நிலைக்குக் கொண்டு வர முடியும் என நம்புகின்றோம்.

வரையறுக்கப்பட்ட அரச நிதியைக் கொண்டிருந்த போதிலும், சுபீட்சத்தின் நோக்கு கொள்கையைச் செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தொடர்ச்சியாக நடவடிக்கை மேற்கொண்டது.

இதுவரை நாம் சுமார் 60 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கியுள்ளோம். வறுமையைக் குறைக்கும் நோக்கத்துடன் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சம் பயிற்சி பெறாத நபர்களுக்கு அரச துறையில் வேலை வாய்ப்புகளை வழங்கியுள்ளோம்.

அரச துறையில் புதிதாகப் பணியமர்த்தப்படுபவர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக அரசாங்கம் மாதாந்தம் சுமார் 350 கோடி பில்லியன் ரூபாவைச் செலவிடுகிறது.

சவால்களுக்கு மத்தியிலும் அரசாங்கம் நாட்டின் பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பில் தொடர்ந்து முதலீடு செய்து வருகிறது. நீர் வழங்கல், எரிசக்தி, போக்குவரத்து, நகர்ப்புற மேம்பாடு, சுகாதாரம், கல்வி மற்றும் வறுமை ஒழிப்பிற்காகத் தொடர்ந்து மேற்கொண்டுள்ள முதலீடுகள் கொவிட்-19 தொற்றுநோய்க்கு மத்தியிலும் இது பொருளாதாரத்தின் இயக்கவியல் மற்றும் சவால்களை எதிர்கொள்ளும் திறனை நிரூபித்துள்ளது.

எவ்வாறாயினும், அண்மைக் காலங்களில் அரச நிதி தொடர்பாக பல கடுமையான சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

இருப்பினும், எதிர்வரும் காலங்களில் எதிர்பார்த்தபடி பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் மற்றும் அபிவிருத்திக்கான வசதிகளை ஏற்படுத்தல் என்பவற்றை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

தொற்றுநோயின் தாக்கத்தால் நமது பொருளாதாரத்தின் வெளிநாட்டுத் துறை பெரும் சவாலை எதிர்நோக்கியுள்ளது. அந்நியச் செலாவணி, பணப்புழக்கம் மற்றும் ரூபாவின் மீதான அழுத்தத்தைக் குறைப்பதற்கு, எதிர்காலத்தில் அந்நியச் செலாவணி வரவைப் பாதுகாக்க அரசாங்கமும் மத்திய வங்கியும் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

உலகளாவிய சுற்றுலாத் துறை மீள ஆரம்பிக்கப்பட்டதுடன், இலங்கையின் சுற்றுலாத் துறையில் குறிப்பிடத்தக்க சாதகமான வளர்ச்சியை எதிர்பார்க்கிறோம்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதற்கும், வெளிநாட்டில் பணியாற்றுபவர்கள் அனுப்பும் பணத்தை வங்கி முறைக்கு ஈர்ப்பதற்கும் நாங்கள் மத்திய வங்கியுடன் இணைந்து பணியாற்றி வருகிறோம்.

வெளிநாட்டுத் துறையின் ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துவதற்கு குறுகிய கால மூலோபாயத் திட்டங்கள் உட்பட பொருளாதாரத்தில் அனைத்து பங்குதாரர்களின் நம்பிக்கையை மேலும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட 'பாரிய பொருளாதாரம் மற்றும் நிதி அமைப்புகளின் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கான ஆறு மாதக் கண்ணோட்டம்' மத்திய வங்கியால் அண்மையில் பிரகடனப்படுத்தப்பட்டமை குறித்தும் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

பொருளாதாரம் ஒரு சவாலான காலகட்டத்தை கடந்து செல்வதை நாம் அறிவோம். இந்த வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட முற்போக்கான முன்மொழிவுகள் எதிர்காலத்திலும் அதற்குப் பின்னரும் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைமுறைப்படுத்தப்பட்ட 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கையில் எமது எதிர்காலத் திட்டங்கள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

அதில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைவருக்கும் பயனளிக்கும் மக்களை மையமாகக் கொண்ட சமூக மற்றும் பொருளாதாரக் கொள்கைகளை செயற்படுத்துவதற்கு இந்த வரவு - செலவுத் திட்டத்தில் சிறந்த பலம் கிடைத்துள்ளது.

நாடு எதிர்நோக்கும் சவால்களை வெற்றி கொள்வதற்கு நாம் செயற்படுத்தும் நிலையான வேலைத் திட்டத்துடன் கைக்கோர்த்து நாட்டின் எதிர்கால பயணத்திற்கு பங்களிக்குமாறு அனைவரிடமும் கோருகின்றோம் எனப் பிரதமர் தெரிவித்தார்.

# நீர்ப்பாசன விவசாயத் திட்டம் தொடர்பாக ஆராயும் விசேட வழிகாட்டல் குழு மாநாடு

காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம் தொடர்பாக ஆராயும் கிழக்கு மாகாணத்துக்கான 5 ஆவது விசேட வழிகாட்டல் குழு மாநாடு நேற்று (செவ்வாய்க்கிழமை) மட்டக்களப்பில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித்த பீ.வணசிங்க தலைமையில் ஆரம்பமாகிய காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம் தொடர்பாக ஆராயும் 5 ஆவது விசேட வழிகாட்டல் குழு கூட்டம் மட்டக்களப்பு சர்வோதய் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

கமத்தொழில் அமைச்சால் செயற்படுத்தப்படுகின்ற காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டத்தின் திட்ட பணிப்பாளர் பொறியியலாளர் ராஜ கருணா பங்கேற்ற இந்த கலந்துரையாடலில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் கலாமதி பத்மராஜா, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் உள்ளிட்ட கமத்தொழில் மற்றும் நீர்ப்பாசன திணைக்களங்கள் உள்ளிட்ட துறைசார் அமைச்சுக்களின் உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

கமத்தொழில் அமைச்சின் ஊடாக உலக வங்கியின் கடன் உதவியுடன் நாடளாவிய ரீதியல் செயற்படுத்தப்படும் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டம் தொடர்பாக ஆராயும் குறித்த கலந்துரையாடலின் போது நீர்ப்பாசன குளங்கள் மற்றும் அணைக்கட்டுகள் புனரமைப்பது தொடர்பாகவும், அதன் ஊடாக விவசாயிகளுக்கு பாரியளவில் நன்மைகளை பெற்றுக்கொடுத்தல் தொடர்பாகவும் விசேடமாக ஆராயப்பட்டது.

இலங்கையின் ஆறு மாகாணங்களில் 11 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டம் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய 3 மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், திருகோணமலை மாவட்டத்தில் யானோயா, மட்டக்களப்பு மாவட்டத்தில் முந்தனையாறு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டத்தில் கேடோயா, கரந்தி ஒயா போன்ற ஆற்றுப்படுக்கைகளை மையப்படுத்திய குளங்கள் புனரமைக்கப்படவுள்ளதுடன் அவற்றில் சில குளங்கள் தற்போது புனரமைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் இந்தத் திட்டத்தை எவ்வாறு சீராகவும் விரைவாகவும் அமுல்படுத்துவது மற்றும் இவற்றை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்களை எவ்வாறு சீர்செய்வது என்பது தொடர்பாகவும் குறித்த மாநாட்டின் போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

# வரவு – செலவுத் திட்ட ஒதுக்கீடு தொடர்பாக ரணில் அதிருப்தி

2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் 89 வீதமான நிதி வெறும் 10 அமைச்சுக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.

தற்போதைய தேவைக்கு ஏற்ப வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் இல்லை எனக் குறிப்பிட்ட அவர், சுகாதார அமைச்சுக்கான ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டுள்ளன எனச் சுட்டிக்காட்டினார்.

எனவே, இந்த ஒதுக்கீடுகள் எவ்வாறு தீர்மானிக்கப்பட்டது என்பது தொடர்பாக விளக்குமாறு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனாத் தொற்று அடுத்த வருடமும் நாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தை அரசாங்கம் புறக்கணிக்க முடியாது என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

# சினிமாத் துறையைத் தொழிலாக அங்கீகரிக்க அமைச்சரவை முடிவு

சினிமாத் துறையை ஒரு தொழிலாகப் பதிவு செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த தீர்மானம் தொடர்பாக நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை சந்திப்பின் போது அறிவிக்கப்பட்டதுடன், இது இலங்கையின் சினிமாத் துறைக்கு ஊக்குவிப்பு மற்றும் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுக்க உதவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் மற்றும் கைத்தொழில் அமைச்சர் இணைந்து இந்த கூட்டுப் பிரேரணையை சமர்ப்பித்துள்ளனர்.

இலங்கை சினிமாத் துறையில் ஏராளமான தனித்துவமான திரைப்படங்கள் உருவாக்கப்பட்டுள்ள அதேநேரத்தில், இலங்கை உலகளாவிய சினிமாவிற்கு புகழ்பெற்ற ஒளிப்பதிவாளர்களை வழங்கியுள்ளதாக அந்தப் பிரேரணையில் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் உள்ளூர் சினிமாத் துறையை ஒரு முக்கிய துறையாக அறிவிக்காததன் விளைவாக, அதன் அளவும் வளர்ச்சியும் ஒரு சிறிய உள்ளூர் சந்தைக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதென்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் உலகளாவிய கொரோனாத் தொற்றுநோயால் உள்ளூர் சினிமாத் துறை நெருக்கடிகளை எதிர்கொண்டது.

சினிமாத் துறையின் முன்னேற்றம் மற்றும் ஊக்குவிப்பின் மூலம் வாழ்வாதாரங்களின் எண்ணிக்கை, சமூக மற்றும் கலாசார, பொருளாதார மாற்றங்கள் மற்றும் சுற்றுலா மற்றும் கல்வித் துறைகளுக்கு உதவுதல் போன்ற பல நன்மைகளை அடைய முடியும் என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், அது கணிசமான அளவில் பொருளாதாரத்துக்கு உதவும் எனவும் பிரேரணையில் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சினிமாவை ஒரு தொழிலாக அங்கீகரிப்பதன் மூலம் உலகின் பெரும்பாலான நாடுகளில் சினிமாத் துறை மேம்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகிறதெனவும் அதில் கூறப்படுகிறது.

# 5,000 இலுப்பை மரக்கன்றுகளை நடும் வேலைத்திட்டம் ஆரம்பம்



ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக நல்லின மரங்களை நடும் தேசிய மரநடுகைத் திட்டம் நாடளாவிய ரீதியில் மாவட்டங்கள் தோறும் இடம்பெற்றுவருகின்றன.

அதற்கமைவாக மட்டக்களப்பு மாவட்டத்திலும் மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரு மான கே.கருணாகரனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் நோக்கில் இந்த மரநடுகைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதன் அடிப்படையில் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் மட்டக்களப்பில் அருகிவரும் மருத்துவ குணம் நிறைந்த, 400 தொடக்கம் 500 வருடங்கள் நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய மரமாக காணப்படும் இலுப்பை மரக்கன்றுகளை நடும் வேலைத்திட்டம் மாவட்டத்தின் 14 பிரதேச செயலக பிரிவுகளிலும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவில் பிரதேச செயலாளர் தட்சணகௌரி தினேஸ் தலைமையில் அரசடித்தீவு விக்னேஸ்வரா விளையாட்டு மைதானத்தில் குறித்த விளையாட்டுக்கழகத்தின் பங்களிப்புடன் இடம்பெற்ற மரநடுகை நிகழ்விற்குப் பிரதம அதிதியாக மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கலந்துகொண்டு பயன்தரும் மருத்துவக் குணம் நிறைந்த இலுப்பை மரக்கன்றுகளை நாட்டிவைத்தார்.

அத்தோடு கிரான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பொண்டுகள்சேனை கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தடானை கிராமத்திலும் கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு தலைமையில் இடம்பெற்ற மரநடுகையிலும் மாவட்ட அரசாங்க அதிபர் கலந்துகொண்டு இலுப்பை மரக்கன்றுகளை நாட்டிவைத்துள்ளமையுடன் ஏனைய 12 பிரதேச செயலக பிரிவுகளிலும் கட்டம் கட்டமாக இலுப்பை மரக்கன்றுகள் நடும் வேலைத்திட்டம் இடம்பெற்றுவருகின்றது.

நாட்டின் சனத்தொகை பரம்பல் அதிகரித்து வரும் நிலையில் பயன்தரும் மரங்கள் காலத்துக்கு காலம் அழிக்கப்பட்டு வருகின்றமையே வரலாற்றுப் பதிவாக மாறிவருகின்ற நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அருகிவரும் மருத்துவ குணம் நிறைந்த நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய, ஒட்சிசனை அதிகளவில் உற்பத்தி யாக்கக்கூடியதுமான இலுப்பை மரத்தை நடுவதன் ஊடாகப் பயன்பெறலாம் என்றும் மாவட்ட அரசாங்க அதிபரின் ஆலோசனைக்கு அமைவாக அரசசார்பற்ற நிறுவனங்களான வேல்ட் விசன், காவியா பெண்கள் அமைப்பு, செரி தொண்டு நிறுவனம், அக்சன் யுனிட் லங்கா மற்றும் மேலும் சில தொண்டு நிறுவனங்களின் பங்களிப்புடன் மாவட்டம் பூராகவும் உள்ள 14 பிரதேச செயலக பிரிவுகளிலும் 5 ஆயிரம் மரக்கன்றுகளை நடும் செயற்திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக நடப்படும் இலுப்பை மரக்கன்றுகள் சரியானதொரு முகாமைத்துவத்துடன் பராமரிக்கும் நோக்கில் பிரதேச செயலாளர்களால் அவ்வப்பகுதிகளில் இருக்கும் விளையாட்டு மைதானங்கள், பொது அலுவலக வளாகங்கள், ஆலய வளாகங்கள் மற்றும் மேலும் பல பொது இடங்களில் நடப்படுவதுடன், உரிய முறையில் பராமரிப்பதற்கான ஆலோசனைகளும் வழங்கிவைக் கப்பட்டுள்ளன.

எதிர்கால சந்ததியினருக்கு இலுப்பை மரத்தின் மகத்துவம் தொடர்பில் புரிதலை ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தின் அடிப்படையில் இந்த மரநடுகை இடம்பெற்று வருவதுடன், பெயர்வழியாக பண்பாட்டுடன் ஒன்றித்த இலுப்பையடிச்சேனை மற்றும் இலுப்பையடி முன்மாரி போன்ற மேலும் சில காரணப்பெயர் கொண்ட கிராமங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்துவரு கின்றமையும் குறிப்பிடத்தக்கவிடயமாகும்.

## மின்வெட்டு இடம்பெறாது கட்டணமும் அதிகரிக்காது

### அமைச்சர் திட்டவட்டம்



நாடளாவிய ரீதியில் மின்சாரம் துண்டிக்கப்படாது என்றும் தொடர்ந்தும் மின் விநியோகம் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் காமினி லொகுகே உறுதியளித்துள்ளார். கடந்த திங்கட்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அமைச்சர் –

மின்சார விடயத்தில் எந்தப் பிரச்சினையும் இல்லை எனத் தெரிவித்தார். மின்சாரம் வழங்கும் திறன் தங்களிடம் உள்ளது என்றும் மின்சாரத்துக்கான கட்டணத்தையும் உயர்த்த மாட்டோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுபுகஸ்கந்த மூடப்பட்டுள்ளது, ஆனால் இந்த ஆண்டு நாங்கள் 50 வீதம் நீர் மூலமும் 50 வீதம் நிலக்கரி மூலமும் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறோம் என அவர் கூறினார்.

கடந்த வருடம் மின்சாரத்தால் ஏற்பட்ட இழப்பு 3,500 கோடி ரூபாவாக இருந்த போதிலும் அதனை 500 கோடியாகக் குறைத்துள்ளோம் எனவும் அமைச்சர் காமினி லொகுகே குறிப்பிட்டார்.

## மரக்கறிகளின் விலை உச்சத்தைத் தொட்டது

நாட்டிலுள்ள பொருளாதார மத்திய நிலையங்களுக்குக் கிடைக்கும் மரக்கறிகளின் விளைச்சல் குறைவடைந்துள்ள நிலையில் நுகர்வோரால் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு மரக்கறிகளுக்கான சில்லறை விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள முதல்நிலை வார சந்தைகள் சிலவற்றில் இந்த நிலை உருவாகியுள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஒரு கிலோ போஞ்சி மற்றும் கறி மிளகாய் 600 ரூபாவுக்கும், தக்காளி ஒரு கிலோ 500 ரூபாவுக்கும், ஒரு கிலோ கரட் 400 ரூபாவுக்கும், பெரிய வெங்காயம் ஒருகிலோ 360 ரூபாவுக்கும், லீக்ஸ் ஒரு கிலோ 320 ரூபாவுக்கும், உள்நாட்டு உருளைக் கிழங்கு ஒரு கிலோ 280 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## பொலிஸாருக்கு காணி அளவீடு செய்ய கிளிநொச்சி நகரத்தில் மக்கள் எதிர்ப்பு

கிளிநொச்சி நகரத்தில் பொலிஸாருக்கு காணி அளவீடு செய்வதற்கு மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் எதிர்ப்பை அடுத்து குறித்த அளவீட்டுப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கே. என். 23 கிராம அலுவலர் பிரிவில் உள்ள தனியாருக்குச் சொந்தமான காணிகள் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. இந்த நிலையில் காணிகளை சுவீகரிக்கும் நோக்கில் காணி அளவீடு செய்வதற்காக நில அளவையாளர்கள், பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் சம்பவ இடத்துக்கு வருகை தந்திருந்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், காணி உரிமையாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள், பிரதேச சபை உறுப்பினர்கள், தவிசாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

அத்துடன் குறித்த காணி தொடர்பில் கிளிநொச்சி நீதி மன்றத்தில் வழக்கு ஒன்று நடைபெற்று வருவதாகவும் காணி உரிமையாளர்களால் தெரிவிக்கப்பட்டதை அடுத்து காணி அளவீட்டுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

## அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு யாழ். பல்கலையில் நேற்று ஆரம்பமானது





யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் ஏற்பாட்டில் இரண்டாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமாகியது.

தமிழ்த் துறையின் தலைவர் பேராசிரியர் ம. இரகுநாதன் தலைமையில் ஆரம்பமாகிய இந்த ஆய்வு மாநாட்டில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா முதன்மை விருந்தினராகவும், கலைப்பீடாதிபதி பேராசிரியர் க.சுதாகர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் முன்னாள் தலைவரும், வாழ்நாள் பேராசிரியருமான, பேராசிரியர் அ. சண்முகதாஸ் மாநாட்டின் திறப்புரையை வழங்கி மாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

மாநாட்டின் போது, ஈழத்துத் தமிழ் இலக்கியத்துக்கும், மொழிக்கும் தொண்டாற்றிய ஏழு புலமையாளர்களுக்குக் கௌரவம் வழங்கப்பட்டது. பண்டிதர் கதிர்ப்பிள்ளை உமாமகேஸ்வரம்பிள்ளை, பண்டிதர் க. ஈஸ்வரநாதபிள்ளை, பண்டிதை வைகுந்தம் கணேசபிள்ளை, பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை, பண்டிதர் ம.ந. கடம்பேஸ்வரன், பண்டிதர் வீ. பரந்தாமன், பண்டிதர் கலாநிதி செல்லையா திருநாவுக்கரசு ஆகிய ஏழு புலமையாளர்களே கௌரவிக்கப்பட்டனர்.



நேற்று 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், இன்று 17 ஆம் திகதி புதன்கிழமையும் நடைபெறவுள்ள இந்த ஆய்வு மாநாட்டில் சுமார் 61 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

# அரச ஊழியருக்கு சம்பளம் அதிகரிக்கப்படல் வேண்டும்

## இரா.துரைரெத்தினம் வலியுறுத்தல்



வரவு – செலவுத் திட்டத்தின் போது அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை அதிகரிக்காமல் விட்டமை அரசஊழியர்களை வறுமையில் கையேந்த வைக்கின்ற செயற்பாடாகும் என முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ், பத்மநாபா மன்ற தலைவருமான இரா. துரைரெத்தினம் தெரிவித்தார்.

முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா. துரைரெத்தினம், வரவு – செலவுத் திட்டம் தொடர்பாக ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் அரச நிர்வாகத்தின் கீழ் கடமையாற்றுகின்ற அனைத்து அரச ஊழியர்கள் அனைவரும் 2022 ஆம் ஆண்டு வரவு – செலவுத்திட்டத்தின் போது சம்பளம் அதிகரிக்கப்படும். தங்களின் வாழ்வாதாரம் உயரும் என எதிர்பார்த்திருந்த சூழ்நிலையில் அவர்கள் எதிர்பார்ப்பை புறந்தள்ளிய வகையில் அரச சேவையாளர்கள் அனைவரையும் ஏமாற்றிய முறையில் இந்த வரவு செலவுத் திட்டம் அமைந்துள்ளது.

தற்போது நாடு எதிர்நோக்கின்ற சூழ்நிலையில் பொருள்கள் சேவைகளது விலை அதிகரிப்புக் காரணமாக அன்றாட வாழ்வாதாரத் தேவையைப் பூர்த்திசெய்து கொள்ள முடியாத வகையில் அரச உத்தியோகத்தர் கடும் கஷ்ட நிலையை எதிர்நோக்கியுள்ள கடன் சுமையுடனும், பொருளாதாரச் சிக்கலுக்கு மத்தியிலும் எவ்வித அரச சலுகைகளும் இல்லாமல் அரச சம்பளத்தையே மட்டும் நம்பி வாழ்ந்து வருகின்ற நிலையில் அரசில் கடமை புரிவோர் மிகவும் நம்பிக்கையுடன் இருந்த நிலையில் அதனைத் தவிடு பொடியாக்கிய வகையில் இந்த அரசு வரவு – செலவுத் திட்டம் அமைந்துள்ளது.

அரசு சம்பளத்தை அதிகரித்து, இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிவாரணம் வழங்கும் என கூர்ந்து கவனித்த வேளையில், அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படவில்லை என செய்தி கேட்டு பல்லாயிரக் கணக்கான அரசஊழியர்கள் மனம் உடைந்து மிகவும் வாழ்வாதாரத்தை ஈடு செய்ய முடியாமலும், பெற்ற கடனைக் கூடக் கட்ட முடியாமல், பொருள்களின் விலை ஏற்றத்துக்கு மத்தியில் செய்வதறியாது வேதனையுடன் உள்ளனர். அரசாங்கத்தின் இந்தப் போக்கு ஆரோக்கியமானதல்ல.

எனவே அரசு வரவு – செலவுத் திட்டத்தை மீள் பரிசீலனை செய்து இந்த ஆண்டிலேயே குறைநிரப்பு வரவு – செலவுத் திட்டத்தின் போது விசேட அனுமதியுடன் அரச ஊழியர்களுக்கான சம்பளத்தை அதிகரிக்க வைப்பதற்கு அமைச்சரவையும், நாடாளுமன்ற மக்கள் பிரதிநிதிகளும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்த விடயம் பரிசீலனை செய்யப்படாவிடின் இந்த வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்குவதா, இல்லையா என நாடாளுமன்ற மக்கள் பிரதிநிதிகள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படவேண்டும்.–என அந்த அறிக்கையில் சுட்டிகாட்டப்பட்டுள்ளது.

# வைத்தியர் அருளானந்தத்துக்கு சாவகச்சேரியில் அமுத விழா!

நோய் நொடி அகற்றி நலிந்த மக்களை மகிழ்விக்கும் வைத்தியர் எஸ்.எஸ். அருளானந்தம் அவர்களைக் கௌரவிக்கும் முகமாக எதிர்வரும் 04.12.2021 அன்று அமுதவிழா நடாத்த சாவகச்சேரி பொது அமைப்புக்கள் தீர்மானித்துள்ளன. எதிர்வரும் 4.12.2021 சனிக் கிழமை பி.ப.2 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோவிலடியில் அமைந்துள்ள தென்மராட்சி கலாசார மண்டபத்தில் அ.கைலாயபிள்ளை தலைமையில் அமுதவிழா நடைபெற உள்ளது.

இதில் ஆசி உரையை பிரம்மஸ்ரீ பாலமுரளீதரக்குருக்களும் வரவேற்புரையை யாழ் திறந்த பல்கலைக்கழக பணிப்பாளா கி.கந்தவேளும் தலைமையுரையை முன்னாள் அதிபர் அ.கைலாயபிள்ளையும் ஆற்றுவர். தொடர்ந்து கல்வியியலாளர்களால் பாராட்டுரை நிகழ்த்தப்படும்.

நிகழ்வில் 'அருளானந்தம்' மலர் வெளியீடும் இடம்பெறும். மலர் வெளியீட்டுரையை யாழ். தமிழ் சங்கத் தலைவர் செந்தமிழ்சொல்லருவி ச.லலீசன் ஆற்றுவார் என விழாக்குழுசெயலாளர் கா.சிவஞான சுந்தரம் தெரிவித்தார்.

# நிராகரிக்கப்பட்டுள்ள சீன உரம் மீள சோதனைக்கு உட்படாது

## அமைச்சு திட்டவட்டம்

சீன உரத்தை மூன்றாம் தரப்பின் ஊடாக பரிசோதனைக்குட்படுத்துவது தொடர்பாக இதுவரை எந்த வித உடன்பாடும் எட்டப்படவில்லை என விவசாய அமைச்சு அறிவித்துள்ளது. மேலும், குறித்த நிறுவனம் மீள பரிசோதனைகளை முன்னெடுத் தாலும் தாவர தனிமைப்படுத்தல் விதிமுறைகளுக்கு அமைவாக நிராகரிக்கப்பட்ட குறித்த உரத் தொகையை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்துள்ளது.

அபாயம் மிக்க நுண்ணுயிர்கள் காணப்படுகின்றன என உறுதிப்படுத்தப்பட்ட சீன உரத்தை மூன்றாம் தரப்பொன்றின் ஊடாக மீண்டும் பரிசோதனைகளுக்கு உட்படுத்தவுள்ளதாக சீனத் தூதுவரை மேற்கோள்காட்டி பத்திரிகையில் செய்தி வெளியாகியது. குறித்த செய்தி தொடர்பாக விளக்கமளித்து விவசாய அமைச்சு விடுத்துள்ள அறிவிப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொற்றாளருக்கு வாய் வழியாக வழங்கப்படும் மருந்தை இலங்கையில் பயன்படுத்த அனுமதி

கொரோனாத் தொற்றாளர்களுக்கு வாய் வழியாக வழங்கப்படும் 'மொனுபிரவீர்' என்ற மருந்தை இலங்கையில் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா தொழிநுட்ப குழு இவ்வாறு அனுமதி வழங்கியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இந்த மருந்தை இலங்கையில் பயன்படுத்துவதற்கான இயலுமை தொடர்பில் தான் கொரோனா தொழில்நுட்ப குழுவிடம் கோரியிருந்தேன் எனவும், அதற்கு பதிலளிக்கும் வகையில் குறித்த குழு இதனைத் தெரிவித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஒரு வயது குழந்தையை பலியெடுத்த கொரோனா

கொரோனா வைரஸ் தொற்றால் ஒரு வயது ஆண் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை தொற்றுடன் தியத்தலாவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளது.

குழந்தைக்கு மேற்கொண்ட 'ரெபிட் அன்டிஜன்' பரிசோதனையின் போதே தொற்றுக்கு உள்ளாகியமை தெரியவந்துள்ளது.

உயிரிழந்த குழந்தையின் சடலம் தகனம் செய்யப்படும் என்று தியத்தலாவை பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜீவந்த பிரசன்ன தெரிவித்தார்.

இதேவேளை, இந்தப் பிரதேசத்தின் கொங்கம ஆரம்பப் பாடசாலை அதிபருக்கும், மாணவர்கள் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது எனவும், அதனால் அப்பாடசாலை நேற்றுத் தொடக்கம் மூடப்பட்டுள்ளது எனவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மேலும் கூறினார்.

பாடசாலை மூடப்பட்டிருப்பதை பண்டாரவளை கல்வி வலயமும் உறுதி செய்துள்ளது.

# எரிபொருள்கள் தட்டுப்பாடு எதிர்க்கட்சி போலிப் பிரசாரம்

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கருத்து



நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் இல்லை என்பதால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஒன்று கூடுவதைத் தவிர்க்குமாறு அரசாங்கம் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின்போதே நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார். நாடாளுமன்றில் நேற்று சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியிருந்தார். மேலும் டொலர் தட்டுப்பாடு ஏற்பட்டால் எவ்வாறு எரிபொருளை டொலரில் கொள்வனவு செய்ய முடியும் என்றும் சஜித் பிரேமதாஸ கேள்வியெழுப்பியிருந்தார்.

மேற்படி கேள்விகளுக்கு பதிலளித்திருந்த ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, நாட்டில் எரிபொருள் நெருக்கடி இல்லாததால் மக்கள் அச்சப்பட வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டார்.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இருப்பதாக எதிர்க்கட்சியினர் போலியான தகவல்களை பரப்பி வருகின்றனர் எனவும் அவர் குற்றம் சாட்டினார்.



# பாதையை தனியார்கள் சொந்தம் கொண்டாடுவதால் குளத்தின் ஊடாக பயணிக்கும் தென்மராட்சி மக்கள்

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கொடிகாமம் கொயிலாமனை மக்கள் கவனவீர்ப்பு போராட்டத்தை கடந்த திங்கட்கிழமை முன்னெடுத்திருந்தனர்.

இராமாவில் கிராமசேவகர் பிரிவு மற்றும் தாவளை இயற்றாலை கிராமசேவகர் பிரிவின் எல்லைக்குட்பட்ட தெருவை தனியார் சிலர் அடைத்து வைத்துள்ளமையால் மக்கள் குளத்துக்கு ஊடாக தமது பயணத்தை மேற்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனால் மாணவர்கள் தமது கல்விச் செயற்பாட்டை மிகுந்த சிரமத்தின் மத்தியில் மேற்கொள்கின்றனர். இடுப்பளவுக்குள்ளான குளத்து நீரிற்குள்ளால் பாடசாலைக்குச் செல்லும் துன்பியலான நிலையில் உள்ளதை அவதானிக்க முடிகிறது.

சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாகப் பயன்படுத்தி வரும் இந்த வீதியை தனியார் சிலர் அது தமது காணி எனத் தெரிவித்து குளத்துடன் இணைத்து வீதியையும் மறித்து வேலியை அடைத்துள்ளனர்.

இதனால் சுமார் 35 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்கள் பாரிய வெள்ளத்தின் மத்தியில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். தமது வீதிக்கு உரிய நடவடிக்கை வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வீதி சாவகச்சேரி பிரதேச சபை வீதி வரைபடத்தில் குறியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய மக்கள் சக்தியின் நேற்றைய எழுச்சி நிகழ்வில்!
















காலைக்கதிர் Kalaikkathir

# கண்ணீர் காணிக்கை

தோற்றம்
11
04
1942



மறைவு
16
11
2021

அமரர்

## நாகரட்ணம் அழகசுந்தரம்

கிருபா லேணர்ஸ் அதிபரின் தந்தையார்

சிரித்த முகத்துடன் உங்களைப் பார்த்தால்
எம் துன்பமெல்லாம் பறந்துவிடுமே
அன்பால் அரவணைக்கும் குணம் கொண்டவரே!
மனதில் வஞ்சம் வைத்து பழக மாட்டிரே!
காணவில்லை உங்கள் சிரித்த வதனத்தை
தொலைத்துவிட்டோமே தங்கத்தை
இனி எங்கு தேடுவோம்
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும் :
கிருபா லேணர்ஸ்
பணியாளர்கள்